| | |
|---|---|
| அனுப்புநர்<br>கோ. தங்கராஜ்,<br>வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ),<br>தோவாளை ஊராட்சி ஒன்றியம்,<br>(இ) பூதப்பாண்டி – 629852 | பெறுநர்<br>திரு. கண்ணன்,<br>த/பெ. வெள்ளபாண்டி,<br>36, பிள்ளையார் கோவில் தெரு,<br>இறைப்புவாரி, நாங்குநேரி. |

ந.க.எண். அ8/1026/2025 நாள்: 22.10.2025.

ஐயா/அம்மா,

பொருள் : மனைப்பிரிவு – தோவாளை ஊராட்சி ஒன்றியம் - திருப்பதிசாரம் ஊராட்சி - திருப்பதிசாரம் வருவாய் கிராமம் - புல எண்கள்: 121/1, 121/3, 121/4, 121/5, 121/6, 121/10ஏ, 122/2, 122/3, 122/5, 122/6 மற்றும் 122/7-ல் அங்கீகரிக்கப்பட்டுள்ள மனைப்பிரிவில் உள்ள பாலத்திற்கு சான்றளித்தல் - தொடர்பாக.

பார்வை :
1. திரு. கண்ணன், இறைப்புவாரி என்பவரின் கடிதம், நாள்: 15.10.2025.
2. உதவி பொறியாளர், தோவாளை ஊராட்சி ஒன்றியம் அவர்களின் அறிக்கை, நாள்: 17.10.2025.
3. மனைப்பிரிவு இறுதி ஒப்புதல் கடிதம் ROC no: A8/3405/2025, நாள்: 07.10.2025.

-------------------------------

தோவாளை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட திருப்பதிசாரம் ஊராட்சி, திருப்பதிசாரம் வருவாய் கிராமம், புல எண்கள்: 121/1, 121/3, 121/4, 121/5, 121/6, 121/10ஏ, 122/2, 122/3, 122/5, 122/6 மற்றும் 122/7-ல் அமைந்துள்ள மனைப்பிரிவிற்கு, பார்வை 3-ன் படி மனைப்பிரிவு இறுதி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி மனைப்பிரிவில் அமைக்கப்பட்டுள்ள பாலத்திற்கு பார்வை 1-ன் படி மனுதாரரால் உறுதிதன்மை சான்றிதழ் வேண்டி விண்ணப்பம் பெறப்பட்டுள்ளது.

மேற்படி மனைப்பிரிவின் ஊடே நீர்வளத்துறைக்கு சொந்தமான, புல எண்: 122/4-க்குட்பட்ட பாசன வாய்க்காலில் நீர்வளத்துறையில் அனுமதி பெறப்பட்டு மனுதாரரால் பாலம் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், அப்பாலமானது பொதுமக்கள் பயன்பாட்டிற்கு ஏற்றவாறு உறுதியாக உள்ளது எனவும், கால்வாயின் நீர்வழித்தடம் பாதிக்காதவாறு கட்டமைக்கபட்டுள்ளது எனவும் பார்வை 2-ல் கண்டுள்ள இவ்வலுவலக உதவி பொறியாளர் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில், மனுதாரரால் அமைக்கப்பட்டுள்ள பாலத்திற்கு உறுதிதன்மை சான்றிதழ் வழங்கப்படுகிறது. இந்த சான்றிதழை காரணம் காட்டி மனுதாரர் வருங்காலங்களில் மேற்படி பாலத்திற்கு உரிமைக் கோர இயலாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

22.10.25

வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ),
இராஜாக்கமங்கலம் ஊராட்சி ஒன்றியம்.

22/10/25